**சமூர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம் - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சமூர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதயம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக காணப்படுவதுடன், தொடர்ந்தியங்கும் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால்,

அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் நிதியம் செயற்பட்டிருந்தது என்பதும், வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனத்தினால் பேணிச் செல்லல் அவசியமாகவுள்ளது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 877(1)(இ) | மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி அதன் பிரதியொன்று அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீடு அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பந்திக்கு இணங்க | 2023 ஆண்டின் போது நிதியத்தினால் ரூபா 2,275,900 தொகைக்கான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டிற்காக தற்போது பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது என. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 163,400,569 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 652,757,142 தொகை ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 489,356,573 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு பங்களிப்புத் தொகை குறைவடைதல் முக்கியமாக காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 5109 நலன்பெறுவோருக்காக வீடமைப்பு உதவி வழங்கும் போது காகிதாகிகளுக்காக ரூபா 5,151,835 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கடந்த ஆண்டின் போது 6936 நலன்பெறுவோருக்காக வீடமைப்பு உதவி வழங்குவதற்காக ரூபா 445,538 | மீளாய்வாண்டின் போது எரிபொருள் மற்றும் காகிதாகிகளுக்காக முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விலைகள் அதிகரித்திருந்தமையால் அதன் படி முன்னைய ஆண்டை விட குறிப்பிட்ட | தேவைப்பாடுகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு ஏற்பாடுகள் விடுவிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் படி கடந்த ஆண்டுக்கு ஒப்பாக நலன்பெறுவோர் எண்ணிக்கை 1827 இனால் குறைந்திருந்த போதிலும் காகிதாகிகள் செலவு ரூபா 4,706,297 இனால் அதிகரித்திருந்தது. அது 1056 சதவீதமான அதிகரிப்பாகும். அதே போல் எரிபொருள் செலவும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 2,021,025 முதல் ரூபா 4,127,235 தொகை வரை ரூபா 2,106,210 இனால் அதாவது 51 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதன் படி நிதியத்தினால் காகிதாகிகள் மற்றும் எரிபொருளுக்கான ஏற்பாடுகள் பிராந்திய மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கும் போது எதுவித பரிசோதனைகளும் மேற்கொள்ளாமல் முறைசாரா விதமாக விடுவிக்கப்பட்டிருந்தது. | வருடத்தில் பணம் மிகையாக ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது என. | |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு அறிமுகப்படுத்தி இருந்த 2021 இன் 10 ஆம் இலக்க திருத்திய உள்நாட்டு இறைவரி சட்டத்தின் அட்டவணை III இன் படி 2021 ஏப்ரல் 01 ஆந் திகதியில் உள்ளவாறு வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் நிலையான வைப்புக்களுக்கான வட்டித் தொகையில் வங்கியினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 5 சதவீத வரித் தொகையை விடுவித்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்த போதிலும் அந்த உரிமையை பெற்றுக்கொள்ள இயலாமல் போனதால் 2023 ஆண்டிற்கான இழக்கப்பட்ட வட்டி வருமானம் ரூபா 46,218,561 ஆகும். | நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் தடுத்து வைத்தல் வரியில் இருந்து விடுவிக்கும் படி விண்ணப்பிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் தடுத்து வைத்தல் வரி விடுவிக்கும் அங்கீகாரம் இத் திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை என. | தடுத்து வைத்தல் வரியில் இருந்து விடுவிக்கும் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதியத்திற்கு சொந்தமான சொத்துக்களை இனங்காணக் கூடியவாறு கணிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பித்திருக்காமையால் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 10,603,910 கிரயத்தை உடைய நிதியத்திற்கு சொந்தமான சொத்துக்களின் உளமை தொடர்பான பரிசோதனை செய்வதற்கு முடியாமல் இருந்தது. | 2024 ஆண்டிற்குரிய பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளும் போது வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் சொத்துக்கள் வேறாக கணிப்பீடு மேற்கொண்டு கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதியத்திற்கு சொந்தமான சொத்துக்கள் வேறாக கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 3.3 செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் நலன்பெறும் குடும்பங்களிடையே லொத்தர் சீட்டிழுப்பு மேற்கொண்டு வீடமைப்பு நிர்மாணத்திற்காக லொத்தர் பரிசு வழங்குவதன் மூலம் அனைத்து மாதங்களிலும் ஒரு பிரதேச செயலகப் பிரிவிற்காக ஒரு வீடு வீதம் மாதாந்தம் 335 வீடுகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 200,000 வீதம் 335 பரிசுகள் வழங்குதல் நிதியத்தின் பிரதான கருமமாகும். ‘‘அஸ்வெசும’’ நலன்புரி நிகழ்ச்சித் திட்டம் 2023 ஜூலை மாதம் முதல் செயற்படுத்தப்பட்டதுடன் சமூர்த்தி நலன் பெறுவோர் எண்ணிக்கை 397,097 தொகை வரை குறைவடைந்தமையால் வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிகழ்ச்சித் திட்டத்திற்காக கிடைத்த பங்களிப்புத் தொகையும் ஜூலை மாதம் முதல் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் முதல் அரையாண்டுக்காக ரூபா 990,598,500 தொகையும் ஜூலை முதல் நவம்பர் வரை ரூபா 182,588,500 தொகையுமாக கூட்டுத்தொகை ரூபா 1,173,187,000 தொகைக்கான பங்களிப்புத் தொகை கிடைத்திருந்ததுடன் திசெம்பர் மாதத்திற்கான பங்களிப்புத் தொகை கிடைத்திருக்கவில்லை. 2022 ஆண்டில் அறவிடப்பட்டிருந்த பங்களிப்புத் தொகை ரூபா 2,042,513,580 தொகையாக காணப்பட்டமையால் அதற்கு ஒப்பாக இந்த ஆண்டின் பங்களிப்புத் தொகை 43 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அதன் காரணமாக மேற்கூறிய குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிதியம் உளதாய் இருத்தல் தொடர்பான சிக்கல் தன்மை ஒன்று தோன்றியிருந்தது. | நிதியத்தின் உளதாய் இருத்தல் தொடர்பாக சிக்கல் தன்மையொன்று தோன்றியிருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். தற்போது நிதியத்திற்கு நலன்பெறுவோருக்கு பங்களிப்புத் தொகை ஏதும் கிடைக்கப் பெறாததுடன் காணப்படும் நிதியம் செலவிடப்பட்டு 2024 ஆண்டின் போது விஷேட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது என. | நிதியத்தை பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |